சிவமயம்

ராம் ராம் ஸீத்தா ரர்ம்.



# இந்தியா, பர்மா, மலாய், டாப்ப

# நொண்டிச்சிந்து.

1-8-1929.

All Copyright Reserved.

PRICE A

ராம் ராம் ஸீத்தா ராம், ராம் ராம் ஸீத்தா ராம். ராம் ராம்

உ

சிவமயம்.

ஸ்ரீ ஸீத்தாராமஜெயம்.

# ராம் ராம் ஸீத்தா ராம்



ஓம் ஸ்ரீ ஸீத்தா லெட்சுமண பரதசத்துருக்க அனுமந்தேய

பரப்பிரமமே ஸ்ரீ ராமச்சந்திராயநமா:

## இந்தியா, பர்மா, மலாய் டாப்பு நொண்டிச்சிந்து

இஃது

இராமனாதபுரம் ஜில்லா சிவகெங்கை ஜமீன்

பாகனேரி ஆவி. நா. நா. நாராயணஞ் செட்டியா ரவர்கள்

குமாரன்

**நா நா கிருஷ்ணா**

அவர்களாலியற்றி

இரங்கூன் இராமகோட்டி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது

ராம் ராம் ஸீத்தா ராம். ராம் ராம் ஸீத்தா ராம். ராம் ராம்

ராம் ராம் ஸீத்தா ராம், ராம் ராம் ஸீத்தா ராம். ராம் ராம் ஸீத்தா ராம்.

ராம் ராம் ஸீத்தா ராம். ராம் ராம் ஸீத்தா ராம். ராம் ராம் ஸீத்தா ராம்.

உ

சிவமயம்.

ராம் ராம் ஸீத்தா ராம்.

# முகவுரை.

என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

அடியேன் இந்தியா பர்மா மலாய்தேச முதலிய இடங்களுக்குச்சென்று ஆங்காங்கு நம்முடைய சகோதரர் சகோதரிகாள் அனுபவிக்கும் கஷ்ட நஷ்டங்களை நேரில்பார்த்து மனஞ்சகிக்கொணாதிருக்கும் தருணம் நமதன்பர்கள் பலர் இப்புத்தகத்தின் வாயிலாக வெளியிடுவது நலமாயிருக்குமென்று சொன்னதை கோரிநமது உலகமோ அடங்கொணாச் சில்வின்வாயில் அகப்பட்டுக்கொண்டு மீளமுடியாமல் ஈடுபட்டு இவ்வளவு கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து வாளா விருப்பத்தாலும் சிலவுகளை அளவோடு நடத்திவரும் கட்டுப்பாடுகளைச் செய்துகொண்டு அதன்வழியாக நடந்துவந்தால் சுகத்தை யனுபவிக்கயேதுவாகுமென்று நினைத்து பணத்தால் படும் கஷ்ட நஷ்டங்களை உங்கள் பத்தினிமார்களும் கூடயிருந்து நேரில்பார்த்து அனுபவித்து வந்தால் அனுவசியச் சிலவுகளுக்கு ஆளாகமாட்டீர்களென்று நினைத்து இச்சிறு புத்தகத்தை வெளியிடலானேன் ஆனதால் நமது சமூகத்தலைவர் சிரமம் பாராது சீர்திருத்த கட்டுப்பாடுகளைச் செய்து குடும்பத்துடன்கூடி வாழ்ந்து சுகத்தை யனுபவிக்கும்படி எம்பெருமான் சதா அருள்புரிவாராக பிரார்த்திக்கிறேன்.

நா நா கிருஷ்ணா.

உ

சிவமயம்.

## ராம் ராம் சீத்தா ராம்.

### வினாயகர்துதி.

தந்திமாமுகனே யொற்றைத் தந்தனே மோதகங்கொள்
தொந்தியாம் வயிற்றாய் நீண்ட துதிக்கையா விக்கினேசா
வந்த விக்கினங்கள் தீர்ந்துவாழ்க நானுனக்கனேக
வந்தனம தந்தேன் விக்கினேசனே வருகுவாயே.

### சரஸ்வதிதுதி.

சுந்தரி பரமன்பாகச் சுதந்தரி மங்கலம்பூண்
கந்தரி பரமநித்திய கல்யாணி மலையானீன்ற
அந்தரி கருணைக்கண்ணி அம்பிகா கலையின்வாணி
வந்தனம் தந்தேன் எந்தனுவினில் வருகுவாயே.

### ராமர்தோத்திரம்.

பூதலத்தை ஓரடி அளந்த ரூபமானபொற்
பாத தாமரைச் சரண்பணிந்து பூசைசெய்குவோம்
மாதவா கோவிந்தா ஹரிகேசவா ஹரிநாராணா
நாதகீத வேதமந்திர ராமராம ராமனே.

### நொண்டிச்சிந்து

1 இந்தியா நகர்தனிலே நாங்களும்
இனபந்து பெண்டீருடன் சுகித்திருந்தோம்
2 பொருள் மிகத்தேட எண்ணி எங்கள்
புத்திர பெண்டீரைவிட்டு சுத்தஞானிபோல்
3 அன்னிய தேசங்களில் கடையுள்ள
அதிகாரி மார்களைக் கண்டுபேசி –
4 ஆள்தேவை யுள்ளவர்கட்கு சம்பளம்
அதிக பொருத்தமுடன் பேசுகையில்
5 விசம்பிகள் வந்துசிலர் வெகு
வேடிக்கை செய்தார்கள் நாரதரைப்போல்
6 அதற்கு அனுசரித்த நல்ல
அன்பர்களால்ச் சீட்டு யெழுதிக்கொண்டு
7 மரையவர்தனையழைத்து நாட்பார்த்து
மருதினம் புரப்பிட்டோம் மனையைவிட்டு
8 மதுரை மார்க்கமதாய் வந்து
மங்கள மீனாக்ஷி சொக்கர் லிங்கரையும்
9 மனதுடன் தியானஞ்செய்து அதைவிட்டு
மருதின ரெயிலேறி சிதம்பரத்தில்
10 தில்லை நடேசனையும் தெரிசித்து
ஸ்ரீரெங்கனதனையும் பணிந்துகொண்டு

இந்தியா பர்மா மலாய் டாப்பு நொண்டிச் சிந்து.

11 சென்னையில் வந்திறங்கி அங்கு
சிலவுள்ள சாமான்களும் வாங்கிக்கொண்டு
12 வருகிறோ மென்றுசொல்லி நமக்கு
பதிலான யெஜண்டுக்குத் தந்தியும் சொல்லி
13 கப்பலிலேப் போயேறி ரெங்கோன்
கப்பலதிசயங்கள் சொல்லவென்றால்
14 நாலுநாளிருக்கவேண்டும் பெரும்
நடுச்சமுத்திர மீண்டு பிழைக்கவேண்டும்
15 சாப்பாட்டு கஷ்டம்ரெம்ப கப்பலில்
சமைத்துப் புஜிப்போமென்ற லிடமுமில்லை
16 செக்கன் கிளாஸானால் அதில்
சிரமங்க ளொன்றுமில்லை மனிதர்கட்கு
17 மூன்றும் வகுப்பானால் சொல்லவேண்டாம்
முழுமூடத் தனமாக நடத்திவைப்பார்
18 ஆடுகள் மாடுகள்போல அனைவரையும்
அடைத்துமே கூண்டுகளில்ப் போட்டுவிடுவார்
19 மலாய்தேசக் கப்பல்க்காக்ஷி ரெம்ப
வேடிக்கையாய் யிருக்கும சொல்லுகிறேன்
20 சஞ்சிப படைகளுண்டு அதன்கஷ்டம்
சகிக்கமுடியாது கேட்பவர்க்கு
21 ஆனாலும் சொல்லுகிறேன் அன்பர்கள்
ஆயாச மில்லாமல்க் கேட்டிடுங்கள்
22 பலபல தேசங்களில் வசிக்கும்
பாமர ஜனங்களை மோசஞ்செய்து
23 நூதன தேசமென்றும் பொருள்கள்
நொடியினில் தேடலாம் கோடியென்று
24 அர்ப்புத தேசமென்றும் அங்கு
அள்ளிக் கொடுக்கிறார்கள் பொருள்களென்றும்
25 வாருங்கள் உடனேயென்றும் மேஸ்திரிகள்
வகைமோசஞ் செய்துமே கூட்டிக்கொண்டு
26 கப்பலதி காரியான பெரிய
கப்பித்தா னிடங்கொண்டு ஒப்பிவைத்து
27 சஞ்சிப் படைகளென்றும் தோட்டத்தில்
சகல பணிவிடையுஞ் செய்வாரென்றும்
28 தகுந்தகிரயம் வாங்கி ஏமாத்தி
சாட்டிகொடுத்து மெள்ள யேகிவிடுவார்
29 கப்பலில் இவர்கள்படும் பெரும்
கஷ்ட மதிகமுண்டு சொல்வதானால்
30 தாய்வேறு பிள்ளைவேறாய் சகல
தனையன் மனைவிகளைப் பிரித்திடுவார்

ராம ராம் சீத்தா ராம்.

31 பிரிக்கிர வேளையிலே இவர்கள்
பெருத்த கவலையுடன் பிதற்றிவிட்டால்
32 சவுக்கடி கொடுத்திடுவார் அதைவிட்டு
தப்பிப்பிழைத்து யெங்கும் போவோமென்றால்
33 புருடனுக் கோரிடமும் நல்ல
பூவையற்கு வேரிடமும் அமைத்திடுவார்
34 சந்தித்துப் பேசிக்கொள்ள ஈசன்
தயவு புரிந்தால்தான் மனைவியுண்டு
35 இல்லையேல் யெப்பொழுதும் இவர்களை
இளைக்க முடியாதும் பரிதாபம்
36 துன்பங்கள் மிகவடைந்து வயிற்றுக்குச்
சோருகஞ்சி யில்லாம லாறுநாளும்
37 அய்யோ சிவனே யென்பார் எங்களை
ஆதரிக்கும் மனிதரில்லை யென்பார்
38 பொரமலைத் துன்பஞ்சொன்னால் எவரும்
பொருக்க முடியாத வருத்தவரும்
39 எட்டுநாள் அங்குந் துன்பம் இதை
எவர்கள் பொருத்துமனம் சகித்திருப்பார்
40 அம்மைகுத்தும வேதனையால் ஏழைகள்
அழுது மயங்கிமனம் துடிப்பதுவும்
41 என்ன பரிதாபம பணத்தால்
எழுதமுடியாத துன்பமுண்டு
42 தோட்டத்திற் போய்ச்சேர்ந்தால் அங்கும்
துரைகள் படுத்துவதும் பெருந்தோஷம்
43 சம்மத மில்லையானால் பெரும்
தடிக்கம்புப் பூசைதான் கிடைக்குமய்யோ
44 பணத்துடனுசையினால் நாங்கள்
படுகிற கஷ்டம்போதும் தலைமுறைக்கு
45 கித்தா மரப்பெருமை செம்பச்
சிரப்பாக வேயிருக்கும் அன்பர்களே
46 பணமகாய்க்கு மரமென்பார் கித்தாப்
பாலெல்லாம் பவனுச்சு முற்காலம்
47 தோட்டமோ வெகுசுத்தம் அதில்த்
தொடர்ந்த வருசைகளாய் மரமிருக்கும்
48 அழகோ பார்க்கொணுது பெரும்
அதிசய மென்றுதான் சொல்லவேணும்
49 பால்வெட்டும் சித்திரமும் அதன்
பட்டை பரந்துயெங்கும ஓடுவதும்
50 காயமில்லாத வெட்டும் வெகு
கண்காட்சி யாயிருக்கும் பார்ப்பதற்கு

இந்தியா பர்மா மலாய் டாப்பு நொண்டிச் சிந்து.

51 பிளேட்டில்ப் பால் ஊற்றுவதும் பின்பு
பிளேட்டில் மருந்து கொஞ்சம் சேர்ப்பதுவும்
52 கட்டியாய் உறைவதுவும் அந்தக்
கட்டியை யெடுத்துமிஷன் கொடுப்பதுவும்
53 சீட்டியாய் அறைப்பதுவும் பலரேக
சித்திரப்பூ வேலையதில்ச் செய்வதுவும்
54 புகைக்கூண்டில்ப் போட்டதுவும் உடனே
பொன்னிறமாக அதுமாரினதும்
55 பிக்கல் மூன்றாரு வெள்ளி என்ன
பெருமை அருமைகளைப் பாருங்களே
56 பணங்காய்க்கு மரமென்று தெரியாமல்
பழங்கதையாக கர்ப்பவிருக்ஷமென்பார்
57 கலியுட காலத்திலே கித்தா
கர்ப்பக விருக்ஷமதாய் மாரிட்டது
58 தினம் தினம் பணங்காய்க்கும் இந்தச்
சித்திர விசித்திரத்தை யென்ன சொல்லுவேன்
59 பணமிப்போ காரச்சு எங்கும்
பியூக்கு பியட்டு யென்னும் போராச்சு
60 மலாய்க்கார ஜனங்களைப்போல் உலகத்தில்
மாசற்ற மனிதர்களைக் காண்பதரிது
61 கயிலியும் சட்டைகளும் ஆடவர்கள்
சலான டொப்பிகளு மாட்டிக்கொண்டு
62 பெண்களோ முக்காடும் அவர்களை
பிரத்தி மனிதர் காண்பதரிதாகும்
63 மதமோ முஸ்லீமாம் அங்கு
மலிவாக ஈயங்களும் விளைவதுண்டு
64 மரி சினிதவக்கே யென்பார பிடிக்காவிட்டால்
மாஞ்ஞாப்பூ சோப்பிஞ்ஞா ஒருங்பிக்கியென்பார்
65 பயததில் மிகுந்தவர்கள் எதற்கும்
பாய் பாய் என்றுசொல்லித் தந்திடுவார்
66 கித்தாக் கிருண்டின்பேரில் அவர்களிடம்
கிஸ்த்திகள் கொடுத்து வாங்கும் பழக்கம்ரெம்ப
67 ஐ ஒ யூ சீட்டுரெம்ப எல்லோரையும்
அரை நிமிஷத்தில் பிடித்து ஆட்டிடுமே
68 அதனுல் வெகுபேரு மலாயில்
அவஸ்தைப் படுவதும் பரிதாபம்
69 தண்ணி மலையில் வாழும் மெய்யன்
தண்டாயுத பாணியின் தைப்பூசத்தில்
70 வாணம் வெகு காக்ஷியொடும் அதை
வந்துபார்க்கும் ஜனங்கள் கோடியாகும்

ராம் ராம் சித்தா ராம்.

71 கப்பல்விட்டு வந்திரங்கும் புதுக்
கணக்கு யேஜண்டுகளை அழைப்பதற்கு
72 தவக்கேகள் தட்டேகளும் இன்னும்
தனவான் கனவான் பல யேஜண்டுகள்
73 வாருங்கள் காரேருங்களென்பார் அனைவர்கட்கும்
வந்தவர்ஆம் யென்று ஆசிர்வதிப்பார்
74 விபூதி குங்குமமும் வந்தவர்க்கு
விளங்கும் விசித்திரம் கண்காக்ஷியாகும்
75 ஆரரை மேல்வீட்டு அய்யன்
ஆருமுகன் வள்ளி தெய்வானையையும்
76 வைகுண்ட நாதனுன அப்பன்
வள்ளல் சித்தா ரெகுருமனையும்
77 தெரிசித்துப் பணிந்துகொண்டு பிரசாதம்
தீர்த்தம் விபூதி துளா வாங்கிக்கொண்டு
78 கடையில் வந்திருந்து சந்தோஷமாய்
கணக்குகளை ஒப்பிக்க யெணணயிலே
79 புதுகணக்கேஜண்டுகள் வெகு
புனிதமாய் வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு
80 கணக்கை எடுங்களென்பார் சீக்கிரம்
கணக்கை எழுதிவிட்டுப் போங்களென்பார்
81 கொடுத்தால் கணக்குகளை அதிலுள்ள
குரிப்பான யெனமெல்லாம் யெழுதிக்கொணடு
82 மொத்த மொத்த துகைகளான நல்ல
முதல்நம்பர் கணக்கெல்லாம் பாக்கிவைப்பார்
83 என்ன வினையமென்ருல் இவைகளை
யெழுதிக்கொள்ள வெகு கசகலென்பார்
84 சீக்கிரம் ஊர்போக எண்ணி பாக்கி
செலுத்தவேண்டிய மொத்த யெனங்களிடம்
85 போய்க்கேட்டால் பாக்கிகளை அதற்குமுன்
புதுக்கணக்கேஜண்டு புகட்டிடுவார்
86 யேதேது சொன்னுலும் இனங்கழ்
இணங்கி வரமாட்டா இவரோடு
87 சம்மனே கிளப்பிவிட்டால் கோர்ட்டில்
தவணை கணக்கில்லாமல் கொடுத்திடுவார்
88 பணம் வெளியாகாது அதனுல்
பளைய யேஜண்டுகளு மலேத்திடுவார்
89 இனங்களை மதிக்கவிட்டால் அதில்
மதிக்கும் துகையில் ரெம்பலாப முண்டேல்
90 சம்பளம் சாமானும் வழிச்சிலவும்
சந்தோஷ மாகவே யெடுத்துக்கொண்டு

இந்தியா பர்மா மலாய் டாப்பு நொண்டிச் சிந்து.

91 ஸர்ஜனம் புகழ்வதும என்ன
உயர்வான யெனங்களாய் கொடுத்தாரென்றும்
92 விருந்துகள் நடப்பதுவும் வெகு
வினோதமாய் தானிருக்கும் சொல்லுகிறேன்
93 ஆடுகோழி மீன்வாத்தும் முட்டை
அல்வாவடை பாயாசம் அப்பங்களும்
94 டூரியாங் மாம்பழமும் வாழை பலா
நூதன கனிவர்க்கங்கள் அமைப்பதுவும்
95 மாலைப் பூச்செண்டுகளும் அம்பரோஸ்
மணக்கு மதிசயத்தால் மயங்கவேணும்
96 சாப்பிடவும் டயமில்லாது சிலவிடத்தில்
சர்வ பலகாரத்தின் விருந்துமுண்டு
97 வழிசென் றனுப்புவதைச் சொன்னால்
வசைவந்து சேருமென்று நிறுத்துகிறேன்
98 ஒருக்கால்க் குறைத்துவிட்டால் மதிப்பில்
மனது வருத்தங்கள் அடங்கொணாது
99 விருந்துங் கிடையாது அனைவர்களும்
வெளியூரு சென்றிடுவார் வேலையென்று
100 சொல்லிகாரது போகவேணும் ஒருக்கால்
சொன்னாலும் பழிப்பாகப் பேசிடுவார்
101 முதலாளிமார்கள் செய்யும் கஷ்டம
மோத யெவர்களாலு மாகா தய்யோ
102 யெழுதிக் கொடுக்கவேணும் னோட்டுகளும
யெணனமென்று தான்சொல்லத் தெரிந்ததுவே
103 நாணயச்சேதி சொன்னால் வெகு
நேஸாகத்தானிருக்கும் கேட்பதற்கு
104 முதலாழிக் கோகடையும அதிலுள்ள
முதல்நம்பர் யேஜண்டுக்குவோர் கடையும்
105 கூட்டாளிக் கோகடையும் இன்னும்
கூட்டு கடைகள்வெகு சொல்லவேண்டாம்
106 முதலோ சொல்லொண்ணாது நிரம்ப
முளு முளுத்துகை கடன்வாங்கவேண்டும
107 தவணைகள் மாத்தவேண்டும் நிமிஷத்தில்
தவறிவிட்டாலோ கடை பரக்கவேண்டும்
108 நித்திய கண்டமல்லோ இந்த
நிலையில்லாப் பணத்தாலே துன்பமல்லோ
109 சிலவோ மிகுந்திட்டது அதனால்
சிரப்பான கட்டுபாடு மறைந்துவிட்டது
110 பர்மா வளப்பங் கொஞ்சம சொல்ல
வசையாகத் தானிருக்கு மன்பர்களே

ராம் ராம் சித்தா ராம்.

111 நாள்மாரி பெய்வதுவும — சகல
நஞ்சேபுஞ்சேகள் நிலம செழிப்பதுவும்
112 கருதுகள் பெருப்பதுவும் — எங்கும்
கண்காச்சி யாயிருக்கும் பார்ப்பதற்கு
113 மணிகள் கணக்குமில்லை — எந்த
மானிடர் பூமியிலும் கண்டதில்லை
114 விளைவுங் குறைவுமில்லை — நெல்லை
வெளிதேசம் எற்றுவிட்டால் விலையுமில்லை
115 விலையோ இறனாரும் — இதில்
வித்தியாசங் கொஞ்சமுண்டு மாரிவிடும்
116 பெண்க ளதிகமான — பர்மா
பெண்டுகளைப் போல்வேறு யாருமேயில்லை
117 அழகில்ச் சிறந்தவர்கள் — அவர்தனை
அன்புடன் வரித்தவர்கள் சிமானைப் போவார்
118 சிலவில் மிகுந்தவாகள் — நல்ல
செண்டுக ளணிந்துகொண்டு மயக்கிடுவார்
119 முகத்தில் தனக்காவும் — பாங்காவ்
மேனாட்டு பட்டுகளு முடுத்திக்கொண்டு
120 பட்டுமாச் சட்டைகளும் — ரெம்ப
பளபளப்புடன் மேனி மினுக்கிகொண்டு
121 சிஞ்சுவைச் சிப்புகளும் — மூடியுல்
ஜொலிக்கும் ஜப்பானபூவு மணிந்துகொண்டு
122 நக்காவும் பத்திகளும — நல்ல
நாயிச்சோ சுவைச்சோவும் லேச்சோவும்
123 கையிலே லேக்காவும் — இரண்டு
காலிலும் சிச்சிங்க ளணிந்துகொண்டு
124 தோளிலே உருமாலும் — குடைபிடித்து
சொகுசாக இவர்களும் நடக்கையிலே
125 பார்த்தோர் மயங்கிடுவார் — உயர்ந்த
பதிவிரதா தர்மயாதவர்கள்
126 மனதில் கபடமில்லா — இந்த
மங்கையர்கள் மேல்மயக்கம் யாருக்குமுண்டு
127 காந்தர்வ விவாகஞ்செய்வார் — மனதில்
கலந்திடலா மென்றால்த் தவறுமில்லை
128 தொழிலில்ச் சிறந்தவர்கள் — இவர்களும்
தொழிலில் மிச்சம்கண்டுதான் சிலவுசெய்வா
129 ஆனதால் பர்மாவில் — எந்த
ஆடவர்க்கு மேலதிகம் மாதர்தொழில்தான்
130 இவர்க ளிடந்தனிலே — நம்மவர்கள்
இணங்கின வட்டிமுதல்க் கொடுத்துவாங்கும்

## இந்தியா பர்மா மலாய் டாப்பு நொண்டிச் சிந்து.

131 தொழில் மிச்சமுண்டானல் வெகு
சுருசுருப்பாக முதல்வட்டி தருவார்
132 செய்தொழில் சிதரிவிட்டால் சொல்லாமல்
சென்றிடுவார் கண்களுக்குத் தெரியவொண்ணு
133 தேசத்தில் கண்டுவிட்டால் மெள்ள
தெரியாத மனிதனைப்போல் நடிப்பார்
134 ஒருக்கால் தெரிந்துகேட்டால் உனக்கு
ஒருவித பேச்சுமில்லை நிம்மேலோவென்பார்
135 தட்டே போதா மப்பீனேயென்றால் சவும்டீ
தட்டிட்டாபாங்நவு அயிங்குமலானே மெணபார்
136 வாரண்டு கிளப்பிவிட்டால் சொல்லவேண்டாம்
வம்புவெட்டுக் குத்துகளும் வந்துசேருமே
137 பிளேக்கின் கொடுமை ரொம்ப காலரு
பெருமோச ருமேனியா காச்சல்களும்
138 அம்மைகள் வைசூரி இவைகளால்
அவஸ்தை படுபவர்கள் வெகுபேருண்டு
139 யேனென்று கேட்பாரில்லை சிக்கை
இதமாக பார்க்கவு மனிதரில்லை
140 குடும்பமோ இங்குமில்லை என்ன
கொடிய வழக்கங்களை செய்துவைத்தார்
141 செத்தாலும கேள்வியில்லை எங்களை
திருமால் மருகன்தான் கார்க்கவேணும
142 மாண்டோர் வெகுபேரு இந்த
மதியற்ற மனிதருடன் வாழ்ந்தொருக்கால்
143 தப்பிப் பிழைத்துவந்தால் ஊரின்
சௌகரியம் சொலலுகிறேன் கேளுங்களே
144 படிப்பில்லாப் பெண்களாலும் அவர்களைப்
படிக்கவைக்காத நம்மள் குறைகளாலும்
145 வீட்டின் கொடுமைரெம்ப சொல்ல
வேடிக்கையாயிருக்கும் விசேஷமெல்லாம்
146 தொண்ணூற்றுநா கூடுமுன்னம் கொஞ்சம்
தொல்லையில்லாதுசிறுய் நடந்ததுகள்
147 கூடிக்கலைந்தவுடன் சகஜமாய்
கூடும் விசேஷமெல்லாம் ஈசல்போல
148 சிலவோ புரப்பிட்டது சகல
சீர் சிரப்புகளெல்லாம் காராச்சு
149 கல்யாணச் சிறப்புகளும் கேழ்க்க
கதையாக வேயிருக்கும சொல்லுகிறேன்
150 மாமியார் சாமான் முன்னம் எதிலும்
மதிக்கமுடியாமல் கொடுக்கவேணும்

ராம் ராம் சீத்தா ராம்.

151 மாப்பிள்ளை வர்காரும் சுற்ற
மனைவியர் மக்கள்களும் வேர்காரும்
152 உறவினர் ஓசாரும் மற்ற
உடன்பங்காளிகள் வேர்காரும்
153 வாத்திய மோர்காரும் அங்கு
வந்தவ ரனைவர்களும் வேர்காரும்
154 சாமான் ஓர்காரும் சர்வ
சங்கீத மேளங்களும் வேர்காரும்
155 சீதனக்கார் வேரும் டார்ஜு
சிரப்பான ஓவர்லாண்டு போர்டுகளும்
156 உலகமே காராச்சு இதற்கு
உழைக்கயெவராலே யாகுமய்யோ
157 நகையின் சிறப்புகளோ கேட்க
நைசாக வேயிருக்கும் சொல்லுகிறேன்
158 முக்கிய திருமங்கில்யம் எவரும்
முறையாக அணிவது வழக்கமில்லை
159 கழுத்துக்கு அட்டிகையும் வயிரக்
கம்மல்களும் நெக்ள் மாலைகளும்
160 சங்கிலி பூவேலை தாலியும்
சரிவர வயிரம்வைத் திணைக்கவேண்டும்
161 கழுத்தாரு பவன்மாலை மாங்காய்மாலை
கனத்த வயிறமுள்ள தோடுகளும்
162 முருகும் பூடிகளும் வெகு
முருக்கான மயிர்மாட்டி செய்யவேணும்
163 மூக்குக்கு புல்லாக்கு ஒன்னைப்பூ
மூக்குத்திகள் வயிரம்வைத் திருக்கவேண்டும்
164 கைக்கு நற்காப்புகளும் கொலுசும்
கனத்த பூவேலைசெய்த வளையல்களும்
165 மோதிர மிருசெட்டும் உயர்ந்த
முதல்நம்பர் லாட்டுகளில் பிறக்கவேண்டும்
166 காலுக்குப் பாதசாம் வெள்ளியென்றும்
கல்லுவைத் திளைகாநினல் விட்டுவிட்டார்
167 பெங்களூர் கொர்னுடு பாம்பே
மேனாட்டுப் பட்டுப்பல திருக்கவேண்டும்
168 சில்க்கில் ஜரிகையுடல் புட்டா
வேடிக்கைப் பூவேலைசெய்த பட்டுவேண்டும்
169 காசிப் பட்டுகளோ இந்தக்
காலத்திற் கெடுப்பாக் காட்டவில்லையாம்
170 நாட்டுத் துணிகளென்றால் அய்யய்யோ
நகைதான் செய்வாரகள் பெண்களுமே
171 பட்டு ரவிக்கை வேண்டும் அதுவும்
பலரெக மாதிரியில் தைக்கவேண்டும்

## இந்தியா பர்மா மலாய் டாப்பு நொண்டிச் சிந்து.

172 ஜாக்கெட்டும் சில்க்குகளாய் அவைகள்
சகஜாக்கெடுப்பாக பூட்டவேண்டும்
173 பஞ்சணை மெத்தைகள் சொன்னால் பெண்கள்
பரிகாசஞ் செய்வாரென்று நிறுத்திவிட்டேன்
174 தந்த வெள்ளிச் சாமான்வேண்டும் அதுவு
தனக்கிணை யில்லையென்று சொல்லவேண்டும்
175 வெங்கலச் சாமான்வேண்டும் உலகத்தோர்
வீரனிவனே யென்று சொல்லவேண்டும்
176 ஜெர்மன் மங்குச்சாமான் வேண்டும் எல்லா
தேசத்தோரும் கண்டுஇதை மதிக்கவேண்டும்
177 மண்மரச் சாமான் யென்றால் அம்மம்மோ
மதியற்ற மடயரல்லோ ஆகவேண்டும்
178 ஒருக்கால் வாங்கிட்டாலும் வெட்கம்
உபயமற்றவரென்றே சொல்லிடுவார்
179 கண்டாலும் நகைத்திடுவார் கலியின்
காலம் விபரீதமாய் விட்டது
180 செட்டுகள் சமைக்கவேண்டும் வந்த
சிமாட்டி மார்களெல்லாம் கதைக்கவேண்டும்
181 மாப்பிள்ளை பெண்சம்மதம் இனிமேல்
மருபிரப்பிலேதான் கேட்கவேண்டும்
182 மாப்பிள்ளையும் பெண்ணும் ஜோடியாய் எவரும்
மனது பொருத்தமுடன் செய்வதில்லை
183 ஒருக்கால் பொருந்திட்டாலும் உலகம்
ஓயாமல்க் கேலிசெய்து நகைத்திடுமாம்
184 இதற்குத்தான் ஐம்பதாண்டு சென்ற
இளவட்ட மாப்பிள்ளைக்கு குமரியையும்
185 பனிரெண்டு ஆண்டுடுஞ் செல்லா இளம்
பச்ச குழந்தைகட்கு கிழவியையும்
186 மணமாய் முடித்துவிட்டு அந்த
மாப்பிள்ளையும் பெண்ணுநின்று மயங்கயிலே
187 இரும்புப் பீரோல்களாம இன்னம்
எண்ணி முடியாத சாமான்களாம்
188 பலகாரம் எண்ணுவதாம் இளங்
பாலக் குழந்தைகள் மயங்கயிலே
189 சட்டிகள் எண்ணவேண்டும் நிறைய
சகல விகடங்களும் அமைக்க வேண்டும்
190 இப்படிச் சிலவுசெய்ய நம்மிடத்தில்
இடைவிடாப் பணங்காய்க்கு மாமுவேண்டும்
191 கறையில்லாச் சிலவுகளை இங்கிலீஷ்
காருண்ய கவர்ண்மெண்டு கண்டதினால்
192 இன்கம்டாக்ஸ் யென்னும் சிலவடக்கும்
ஏவல்தூதர்போல இதை யனுப்பிவைத்தார்

ராம் ராம் சீத்தா ராம்.

193 பட்டத்தின் அதிசயமோ வெகு
பவுசாகவே யிருக்கும் சொல்லுகிறேன்
194 பணமட்டுஞ் சிலவுசெய்தால் நீங்கள்
பகவான் பட்டமுதல் வாங்கிடலாம்
195 ராவு பஹதூரென்பார் இவர்
ரபிட்டான பணிவிடை செய்தாரென்பார்
196 ஹானரபல் பட்டமென்பார் இவர்
அரியபெரிய வேலை செய்தாரென்பார்
197 திவான் பஹதூரென்பார் இவர்
திரமான வேலைகளைச் செய்தாரென்பார்
198 நைட்டுப் பட்டமென்பார் உலகத்தில்
நைஸான வேலைகளைச் செய்தாரென்பார்
199 சர்ப்பட்டக் காச்சிமட்டும் எல்லா
சகஜனுக்கு மதிப்புள்ள பட்டமதாம்
200 லார்டு பட்டம் வந்தால் என்ன
நவின்றிடலாம் கண்ணன் வள்ளலென்றே
201 சிரஞ்சீவி பட்டமட்டும் எந்தச்
சீமையிலும் கொடுப்பது வழக்கமில்லை
202 பணமட்டு மிருக்குமானால் சகல
பஸ்ட்லாஸ்ப் பதவிகளும் வந்துசேரும்
203 பணமில்லா யேழைகள்மட்டும் இந்தப்
பாரதப் பூமியில் வாழ ஞியாயமேயில்லை
204 பிணம்போல் நடமில்லாமல் எங்கேனும்
பிழைக்கு மிடந்தெரிந்து போகவேண்டும்
205 இருந்தால் நகைத்திடுவார் இல்லையானால்
இங்கிலீஷ் கவர்ண்மெண்டு காக்கவேணும்
206 புதுமணம புரியவேண்டும் முன்னால்
பெண் விலைக்கிருக்கியை குறைக்கவேண்டும்
207 இன்னமொன்று சொல்லுகிறேன் அன்பர்கள்
என்ன விபரீதம் பாருங்களே
208 ஈசன்முதல் தேவர்களும் இன்னும்
இதரகுலத்தவர்கள் பிராமணரும்
209 முப்பத்து முக்கோடி ஜனமுள்ள
முதல்நகர் இந்தியா மன்னர்களும்
210 அமெரிக்கன் பாரீஸும் துருக்கி
ஆஷியாமுதல் ஜப்பான் சைனுவும்
211 மனைவியைப் பிரிய மனம் இல்லாமல்
மருதேசங்களும் கூட்டி செல்கையிலே
212 பொருள்தேட ஏகயிலே உங்கள்
பூவையர்களை விட்டுப் பிரிந்ததினல்
213 யாத்திரை போவதும் அதனுல்
யாவருக்கும் பாபம் வந்து சூழ்வதுவும்

இந்தியா பர்மா மலாய் டாப்பு நொண்டிச் சிந்து

214 புருடர்கள் வாழ்வதுவும் சொன்னால்
புகலொணாக் கஷ்டமிங்கு படுவதுவும்
215 ஜோடிகள் பிரிவதுவும் அன்பில்லா
தொல்லை தனவணிக குலத்தவர்க்கே
216 சகலமும் மாற்றிக்கொண்ட இந்த
தடபுடலிலு மிதுமாவில்லை
217 சொன்னாலும் பாபமில்லை உலகம்
தூற்றினாலும் மிவர்க்கு கோபம்வல்லை
218 ஆசைகள் இல்லையென்று எவரும்
ஆதிக்கமாகச் சொல்ல முடியாதுண்மை
219 இருந்தும் பிரிந்து நீங்கள் மனதால்
இங்குங்கஷ்ட மவர்க ளங்குங்கஷ்டம்
220 இப்படிப் பிரிவதனால் பாபம்
இவரும் சுவர்ககமுட னவருஞ்சேர்ந்து
221 யெனிந்தக் காக்ஷி கொள்ள கடவுள்
எழுதாமலும் வீணாய் மயங்கவேண்டும்
222 கூட்டுங்கள் கூடுங்களே அன்பர்காள்
கூட்டாவிட்டால் இன்னும் தோஷமவரும்
223 என்ன விபரீதம இப்படி
எந்த யுகத்திலேனும் நடந்ததுண்டா
224 பணமே பிழைப்பாச்சு மேலான
பகவான் திருவடியை மரக்கலாச்சு
225 வயதோ முடிவாச்சு எமன்
வாரண்டு தூதர்களும் வருகலாச்சு
226 பேரோ மறைவாச்சு இருக்கும்
பிள்ளைகள் காலம் வெகுகோலமாச்சு
227 வம்பே கரும்பாச்சு எதிலும்
வலுத்தவர் வார்த்தையே இரும்பாச்சு
228 இருளோ மறைவாச்சு இனிமேல்
இநப்பது சூரியன் ஒளியாச்சு
229 திருவாளர் பாகனேரி ராமன்
திருவடி மறவாத தனவணிக
230 நாராயணஞ் செட்டியார் மைந்தன்
நாராகிருஷ்ண னன்பா யுரைத்திருக்கேன்
231 குற்றங்கள் யேதேனும் இருப்பினும்
குணமாகக் கொள்வீர்கள் நண்பர்களே
232 ஐங்கான் பதம்வாழி கலைமகள்
அருமுகன் உமைசிவன் பதம்வாழி.
233 பாகனேரியில் வாழும் புல்வா
நாயகி யம்பா ளடிவாழி
234 திருமகள் பதம்வாழி கண்ணன்
திருமா லிணைகளும் வாழி வாழி.

ராம் ராம் சீத்தாராம்.

சிவமயம்.

# இப்புத்தகங்கள் கிடைக்குமிடம்

மெ. சுப. கண. மெய்யப்ப செட்டியாரவர்கள்

தோந்தை TWANTE.

---

குமு. சுப. சு. க. சித. கருப்பஞ் செட்டியாரவர்கள்

சயிலா KYAIKLAT, Pyapon Dist.

---

பெ. நா. கோவிந்தஞ் செட்டியாரவர்கள்

Old No. 13-6, New No. 122, Mogul Street, Rangoon.

---

ராம. செ. ராம. செல்லப்ப செட்டியாரவர்கள்

81, Mogul Street, Rangoon.

இராமகோட்டி அச்சுக்கூடம்,
159, 32-வது கல்லி,
இரங்கூன்